**களனி பல்கலைக்கழகம் - 2022**

--------------------------------------------------------

## 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 அபிப்பிராயம்

களனி பல்கலைக்கழகத்தின் 2022 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயலாற்றல் கூற்று, உரிமை மூலதனத்தில் மாற்றங்கள் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான காசுப்பாய்ச்சல் கூற்று மற்றும் நிதிக்கூற்றுக்களுக்கான குறிப்புக்கள், பொழிப்பாக்கப்பட்ட முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகளுடன் கூடிய 2022 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 1978 இன் 16 ஆம் இலக்க பல்கலைக்கழகங்கள் சட்டத்தின் 107(5) உப பிரிவுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையினதும், 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்தினதும் ஏற்பாடுகளின் பிரகாரம் எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்பட வேண்டுமென நான் கருதும் எனது கருத்துரைகள் மற்றும் அவதானிப்புக்கள் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன.

நிதிக்கூற்றுக்கள் பல்கலைக்கழகத்தின் 2022 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் காசுப்பாய்ச்சலினையும் இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க உண்மையாகவும் நியாயமாகவும் பிரதிபலிக்கும் வகையில் நிதிக்கூற்றுக்கள் தயாரிக்கப்பட்டுள்ளன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.2 அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (இக.நி) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். இக் கணக்காய்வு நியமங்களின் கீழான எனது பொறுப்புக்கள் எனது அறிக்கையில் நிதிக்கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள் பந்தியில் மேலும் விபரிக்கப்படுகின்றன. எனது முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக் கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

### 1.3 நிதிக்கூற்றுக்களிற்கான முகாமைத்துவத்தினதும் அவ் ஆளுகைக்கு உட்பட்ட தரப்பினர்களினதும் பொறுப்புக்கள்

இந்நிதிக்கூற்றுக்களை இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களிற்கு இணங்க தயாரித்து சரியாகவும் நியாயமாகவும் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

நிதிக்கூற்றுக்களைத் தயாரிக்கும் போது, பல்கலைக்கழகத்தின் தொடர்ந்தியங்கும் இயலுமையை தீர்மானித்தல் முகாமைத்துவத்தின் பொறுப்பொன்றாக இருப்பதுடன் முகாமைத்துவமானது பல்கலைக்கழகத்தை கலைப்பதற்கு கருதினால் அல்லது வேறு மாற்று வழி இல்லாவிட்டால் செயற்பாடுகளினை இடைநிறுத்த நடவடிக்கை எடுத்தால் தவிர தொடர்ந்தியங்கும் கணக்கீட்டு எண்ணக்கரு அடிப்படையினை பயன்படுத்துதல் மற்றும் மன்றம் தொடர்ந்தியங்குவதற்கு உரிய விடயங்களை வெளிப்படுத்துவதும் முகாமைத்துவத்தின் பொறுப்பொன்றாகும்.

பல்கலைக்கழகத்தின் நிதி அறிக்கையிடல் செயன்முறை தொடர்பான பொறுப்பு, அவ் ஆளுகைக்குட்பட்ட தரப்பினர்களினால் ஏற்கப்படும்.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 16(1) ஆம் உப பிரிவின் பிரகாரம் பல்கலைக்கழகத்தின் வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களை

தயாரிக்கக்கூடியவாறு அதன் அனைத்து வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் தொடர்பான புத்தகங்கள் மற்றும் பதிவேடுகளை முறையாக பேணுதல் வேண்டும்.

## 1.4 நிதிக்கூற்றுக்கள் கணக்காய்வு தொடர்பான கணக்காய்வாளரின் பொறுப்பு

ஒட்டு மொத்தமாக நிதிக்கூற்றுக்கள், மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்டதாக நியாயமான உறுதிப்படுத்தலொன்றைப் பெற்றுக்கொள்வது மற்றும் எனது அபிப்பிராயம் உள்ளடக்கப்பட்ட கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை வழங்குவது எனது நோக்கமாகும். நியாயமான உறுதிப்படுத்தல் உயர் மட்டத்திலான உறுதிப்படுத்தலொன்றாக இருந்த போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வினை மேற்கொள்ளும் போது அது எப்போதும் பொருண்மையான தவறான கூற்றுக்களின் இல்லாமை என்பதன் உறுதிப்படுத்தலொன்றல்ல. மோசடி அல்லது தவறுகள் தனியாகவோ கூட்டாகவோ தாக்கமளிப்பதால் பொருண்மையான தவறான கூற்றுக்கள் இருக்க கூடியதாக இருப்பதுடன் இந்நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பயன்படுத்துவோரால் பொருளதார தீர்மானங்கள் எடுக்கும் போது அது தொடர்பாக கருத்தில் கொள்ளப்படல் வேண்டும்.

துறைசார் வெளிப்படை மற்றும் தொழில்துறை பின்னணியுடன் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் என்னால் கணக்காய்வு செய்யப்பட்டன. மேலும்,

- மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களின் ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தின் இனங்காணும் போதும் மதிப்பீட்டின் போது சந்தர்ப்பத்திற்கு பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடுவதன் மூலம் மோசடிகள் அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய ஆபத்துகளை தவிர்த்துக் கொள்வதற்கும் போதுமான மற்றும் பொருத்தமான கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்ளல் எனது அபிப்பிரயாத்திற்கு அடிப்படையாகும். பொருண்மையான பிறழ் கூற்றினால் எழும் தாக்கங்களினை விட மோசடிகளால் இடம்பெறும் தாக்கம் பாரியதாக இருப்பதுடன் தவறான கூட்டிணைவு, தவறான ஆவணங்களைத் தயாரித்தல், வேண்டுமென்றே விட்டுவிடுதல் அல்லது உள்ளக கட்டுப்பாட்டை தவிர்ப்புச் செய்தல் மோசடியொன்று ஏற்படுவதற்கு காரணமாகின்றது.

- சந்தர்ப்பங்களிற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைப்பதற்காக கணக்காய்வுடன் தொடர்புடைய உள்ளகக் கட்டுப்பாடுகள் தொடர்பான அறிவை பெற்றுக்கொள்வதற்காகவேயன்றி பல்கலைக்கழகம் உள்ளகக் கட்டுப்பாடுகளின் செயற்திறன் மீது அபிப்பிராயமொன்றை தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல.

- முகாமைத்துவத்தால் பின்பற்றப்பட்ட கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தப்பாடுகளையும் பயன்படுத்திய கணக்கீட்டு மதிப்பீடுகள் மற்றும் தொடர்புடைய வெளிப்படுத்தல்களினையும் நியாயமாகவும் மதிப்பீடு செய்தல்.

- நிகழ்வுகள் அல்லது நிலைமைகள் காரணமாக பல்கலைக்கழகத்தின் தொடர்ந்து இயங்குவது தொடர்பாக போதியளவில் நிச்சயமற்ற நிலைமையொன்று இருக்கின்றதா என்பது தொடர்பாக பெற்றுக்கொள்ளப்பட்ட கணக்காய்வுச் சான்றுகளை அடிப்படையாகக் கொண்டு கணக்கீட்டிற்காக பல்கலைக்கழகத்தின் தொடர்ந்தியங்குவது தொடர்பாக அடிப்படையின் பயன்பாட்டின் பொருத்தப்பாட்டினை தீர்மானிக்கின்றது. பொருண்மையான நிச்சயமற்ற தன்மை காணப்படுகின்றது என நான் முடிவுக்குவந்தால், நிதிக்கூற்றுக்களில் அது தொடர்பாக வெளிப்படுத்துவதற்கு எனது கணக்காய்வு அறிக்கையின் மீது கவனம் செலுத்துதல் வேண்டியதுடன் அவ்வெளிப்படுத்தல்கள் பொருண்மையாக இல்லாதிருந்தால் எனது அபிப்பிராயத்தை வெளிப்படுத்த வேண்டும். எவ்வாறாயினும், எதிர்கால நிகழ்வுகள் அல்லது நிலைமைகள் மன்றத்தின் தொடர்ந்தியங்கும் நிலைமையை முடிவுறுத்த நேரலாம்.

- வெளிப்படுத்தல்கள் அடங்கலாக நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தல், கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கங்களை மதிப்பீடு செய்தல் மற்றும் நியாயமான சமர்ப்பித்தலினை

நிறைவேற்றுவதற்கு அடிப்படையாகக் காணப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் நிகழ்வுகளை நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டுள்ளதா என்பதனை மதிப்பீடு செய்தல்.

இயலுமான வரையிலும் தேவையான எந்தவொரு சந்தர்ப்பத்திலும் பின்வருவனவற்றை பரீட்சிப்பதற்காக விடயப்பரப்பு விரிவுபடுத்தப்பட்டுள்ளது.

- தகவல்கள் சமர்ப்பித்தல் தொடர்பாக பார்க்கும் போது பல்கலைக்கழகத்தின் செயற்பாடுகள் தொடர்ச்சியாக மதிப்பீடு செய்யப்படக்கூடிய வகையில் அதன் ஒழுங்கமைப்பு, முறைமைகள், வழிகாட்டிக் கோவை, பதிவேடுகள், அறிக்கைகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் முறையாகவும் போதியளவிலும் திட்டமிடப்பட்டுள்ளதா எனவும் அதன் முறைமைகள், வழிகாட்டிக் கோவை, பதிவேடுகள், அறிக்கைகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் ஆக்கபூர்வமாக பேணிச்செல்லப்படுகின்றதா எனவும்

- ஏதேனும் உரிய எழுத்துமூல சட்டத்திற்கோ அல்லது பல்கலைக்கழகத்தின் நிர்வாக சபையினால் வழங்கப்பட்ட பொது அல்லது விசேட ஏற்பாடுகளுக்கு இணங்க பல்கலைக்கழகம் செயற்படுகின்றதா எனவும்

- தனது அதிகாரங்கள், இலக்குகள் மற்றும் பணிகளுக்கு இணங்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாகவும்

- வளங்கள் சிக்கனமாக, செயற்திறனாகவும் ஆக்கபூர்வமாகவும் காலஎல்லைக்குள் மற்றும் உரிய சட்ட விதிகளுக்கு இணங்க பெறுகை செய்யப்பட்டுள்ளதாகவும்

## 1.5 பெறவேண்டிய மற்றும் செலுத்த வேண்டிய கணக்குகள்

### 1.5.1 பெறவேண்டிய பணம்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| 22 உத்தியோகத்தர்களிடம் இருந்து அறவிட வேண்டிய கூட்டுமொத்தமான ரூபா 2,021,205 ஆன கடன் தொகையில் எந்தவொரு தொகையும் மீளாய்வாண்டின் போதும் அறவிடப்பட்டிருக்கவில்லை. | இந்த கடனை பெற்ற நபர்களின் ஊழியர் சேமலாப நிதியம் மற்றும் ஓய்வூதிய நிதியத்தில் எதிர்வரும் ஆண்டுகளில் விடுவிக்கும் போது உரிய அறவிடவேண்டிய மீதிகளை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | தாமதம் இன்றி அறவிடுவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

### 1.5.2 செலுத்த வேண்டிய பணம்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| மீளாய்வாண்டின் திசெம்பர் 31 இல் உள்ளவாறு நானாவித கடன்கொடுத்தோரின் கீழ் காண்பிக்கப்பட்ட 2019 சனவரி முதல் 2022 யூன் வரையான காலத்திற்குரிய கூட்டுப்பெறுமதி ரூபா 5,837,960 ஆன இரத்துச் செய்யப்பட்ட 359 காசோலைகளுக்காக செலுத்த வேண்டிய பணத்தை தீர்த்து வைப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | 2022.12.31 இல் உள்ளவாறு இரத்துச் செய்யப்பட வேண்டிய காசோலைகள் 2023 ஆம் ஆண்டின் போது சரிசெய்யப்படும். | தாமதம் இன்றி தீர்த்து வைத்தல் வேண்டும். |

## 1.6 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்களுடன் இணங்காமை

| | சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுடனான தொடர்பு | இணங்காமைகள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|---|
| (அ) | இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் நிதிப் பிரமாணக் கோவை | | | |
| (i) | நிதிப் பிரமாணம் 371 | 2015 – 2022 காலப் பகுதியில் பல்கலைக்கழகம் பல்வேறு பணிகளுக்காக 89 சந்தர்ப்பங்களின் போது வழங்கியிருந்த கூட்டுப் பெறுமதி ரூபா 6,875,758 ஆன முற்பணம் மீளாய்வாண்டின் திசெம்பர் 31 ஆம் திகதி வரையிலும் தீர்த்து வைக்கப்பட்டிருக்கவில்லை. | அறவிடுவதற்கு தேவையான பணத்தை தீர்த்து வைப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | தாமதம் இன்றி தீர்த்து வைத்தல் வேண்டும். |
| (ii) | நிதிப் பிரமாணம் 571 | 02 வருடங்களுக்கு மேற்பட்ட காலம் முதல் காணப்படுகின்ற கூட்டுப் பெறுமதி ரூபா 31,150,036 ஆன கேள்வி வைப்புக்கள் மற்றும் பாதுகாப்பு வைப்புக்கள், 05 வருடங்களுக்கு மேற்பட்ட காலத்தில் இருந்து காணப்படுகின்ற நூலக வைப்பு ரூபா 6,059,000 தொடர்பாகவும் நிதி பிரமாணத்தின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | 02 வருடங்களை விஞ்சிய வைப்புக்களை வருமானத்திற்கு எடுப்பதற்கு எதிர்காலத்தில் நடவடிக்கை எடுக்கப்படும். | நிதிப் பிரமாணத்தின் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (ஆ) | 2021 யூலை 28 ஆம் திகதிய இலக்கம் 01/2021 என்ற தேசிய வரவு செலவு திட்ட சுற்றறிக்கையின் 2.3 (அ)ii | செலவினங்களை வரையறுக்குமாறு சுற்றறிக்கை மூலம் ஆலோசனை வழங்கப்பட்டிருக்கும் போது மீளாய்வாண்டில் கூட்டுமொத்தமாக ரூபா 154,884,302 ஆன நிலையான சொத்துக்கள் கொள்வனவு செய்யப்பட்டிருந்தன. | வருடாந்தம் ஆட்சேர்ப்பு மேற்கொள்ளப்படுகின்ற மாணவர்களின் எண்ணிக்கை படிப்படியாக அதிகரிக்கும் போது அவர்களுக்கு தேவையான வசதிகள் பல்கலைக்கழகம் மூலம் வழங்க வேண்டியதாக காணப்பட்டமை. | சுற்றறிக்கை ஏற்பாடுகளின் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

## 2. நிதி மீளாய்வு

### 2.1 நிதி விளைவுகள்

மீளாய்வாண்டின் செயற்பாட்டு விளைவுகள் ரூபா 3,612,869,460 மிகையாக இருந்ததுடன், அதற்கு நேரொத்த முன்னைய ஆண்டின் மிகை ரூபா 2,343,859,893 ஆகும். அதன் பிரகாரம் நிதி விளைவுகளில் ரூபா 1,269,009,567 அதிகரிப்பு அவதானிக்கப்பட்டது. இந்த அதிகரிப்பிற்கு முதலீட்டு வருமானம், தொலைக் கல்வி மற்றும் தொடர்ச்சியான கல்வி பிரிவின் வருமானம் மற்றும் உள்ளக வருமானங்கள் அதிகரித்தமை பிரதான காரணமாக இருந்தது.

### 2.2 விகிதாசார பகுப்பாய்வு

(i) மூலதனத்தின் மீதான இலாபம்

2021 ஆம் ஆண்டின் போது உரிமை மூலதனத்தின் அடிப்படையில் இலாப விகிதம் 11.8 சதவீதமாக இருந்ததுடன், மீளாய்வாண்டின் போது 15.6 சதவீதம் ஆகும். அது 2021 ஆம் ஆண்டுடன் ஒப்பிடும் போது அதிகரிப்பாகும்.

(ii) நடைமுறைச் சொத்து விகிதம்

நடைமுறைச் சொத்துக்களுக்கு நடைமுறைப் பொறுப்பு விகிதம் 2:1 ஆக ஆகக் குறைந்தது காணப்பட வேண்டியிருந்ததுடன், மீளாய்வாண்டின் போது அது 3.9:1 ஆக காணப்பட்டதுடன், 2021 ஆம் ஆண்டின் போது அந்த விகிதம் 2.65:1 ஆகும்.

## 3. செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 முகாமைத்துவ செயற்திறனின்மைகள்

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | ரூபா 15,302,360 பெறுமதியான 05 விடயங்கள் களஞ்சிய பேரேட்டில் அறிக்கையிடப்படாமையால் வருடாந்த இருப்பு மெய்மெய்யாய்வின் போது கூட்டுப்பெறுமதி ரூபா 259,194 ஆன 47 வகையான விடயங்களில் மிகை இருப்பாகவும் கூட்டுப் பெறுமதி ரூபா 746,444 ஆன 22 விடயங்களில் குறைவான இருப்பாகவும் இனங்காணப்பட்டதன் காரணமாக களஞ்சிய நிர்வாகம் தொடர்பாக உள்ளக கட்டுப்பாடு நலிவான மட்டத்தில் காணப்பட்டது. | வருடாந்த இருப்பு மெய்மெய்யாய்வின் போது களஞ்சியம் மூடப்பட்டிருந்த காலத்தில் கிடைத்த விடயங்கள் 2023 சனவரி மாதத்தின் போது இருப்பு பேரேட்டில் அறிக்கையிடப்பட்டதுடன், மிகை இருப்பை களஞ்சிய இருப்பில் உள்ளடக்குவதுடன், குறை மற்றும் மிகை இருப்புக்கள் ஏற்படாமல் இருப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | களஞ்சிய நிர்வாகம் தொடர்பாக உள்ளக கட்டுப்பாட்டை வலுப்படுத்துதல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (ஆ) | கற்கை நடவடிக்கைகளுக்காக வெளிநாடு சென்றதன் பின்னர் பிணை முறிகளை மீறிய கல்விசார் மற்றும் கல்விசாரா பதவி அணியினரில் கூட்டுமொத்தமாக ரூபா 331,889,180 தொகை 2022 திசெம்பர் 31 இல் உள்ளவாறு அறவிட வேண்டியதாக காணப்பட்டது. 11 உத்தியோகத்தர்களுக்கு உரிய ரூபா 148,125,179 தொகையில் மீளாய்வாண்டின் போது எந்தவொரு தொகையும் அறவிடப்பட்டிருக்கவில்லை. | பிணை முறிகளை பணமாக்கிக் கொள்வதற்கு முடியாதிருந்த கல்விசார் பதவி அணியினருக்கு மீள்நினைவூட்டல் கடிதம் அனுப்பப்பட்டுள்ளதுடன், கல்விசாரா பதவி அணியினருக்கு உரிய தொழில் திணைக்களத்தில் ஆலோசனைகளை பெற்றுள்ளதுடன், அதன் பிரகாரம் உரிய பணத்தை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | தாமதம் இன்றி அறவிடும் செயற்பாடுகளை மேற்கொள்வதற்கு தேவையான நடவடிக்கைகள் எடுக்கப்படல் வேண்டும். |

## 3.2 செயற்பாட்டு செயற்திறனின்மைகள்

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | வெளிவாரி படநெறிக்காக 2016 கல்வி ஆண்டிற்காக பதிவு செய்த மாணவர்களில் பாடநெறிகளை ஆரம்பித்தல் 2019 மார்ச் வரையும், 2017, 2018, 2019 கல்வி ஆண்டுகள் மூன்றுக்காக 2022 யூன் வரையும் தாமதப்படுத்தப்பட்டிருந்தது. கல்வி ஆண்டிற்காக மாணவர்களை பதிவு செய்தலில் தாமதம், குறித்துரைத்த காலத்தில் பரீட்சைகளை நடாத்துவதற்கு முடியாமை மற்றும் பரீட்சை பெறுபேறுகளை விநியோகிப்பதற்கு அதிக காலம் எடுத்தமை போன்ற விடயங்களினால் வெளிவாரி பட்ட பாடநெறிகளை பூர்த்தி செய்வதற்கு பதிவு செய்த மாணவர்களுக்கு அதிக காலம் எடுத்திருந்தது. | 2012/2013 கல்வி ஆண்டின் போது வெளிவாரி பட்ட பாடநெறிக்காக 27,700 மாணவர்கள் அளவில் தகைமை பெற்ற விண்ணப்பதாரர்கள் இருந்தமையால் பல்கலைக்கழகத்திற்கு முகாமைத்துவம் செய்தல் வசதியீனமாக இருந்தமையால் அந்த மாணவர்களுக்கு பிரதேச ரீதியில் மாநாடுகளை நடாத்துவதற்கும், கல்வி உதவியினை வழங்குதலும் மேற்கொள்ளப்பட்டிருந்தது. இதன் காரணமாக மாணவர்களை பதிவு செய்தல் 2014, 2015 மற்றும் 2016 கல்வி ஆண்டுகளின் போது தாமதமாக இருந்த போதும் 2017, 2018, 2019 கல்வி ஆண்டுகளுக்காக மாணவர்களை பதிவு செய்தல் பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு சுற்றறிக்கையின் ஆலோசனையின் பிரகாரம் நிறுத்தப்பட்டுள்ளது. | தேவையற்ற தாமதங்களை தடுத்து மாணவர்களை ஆட்சேர்ப்பதற்கும் குறித்துரைத்த பிரகாரம் பரீட்சைகளை நடாத்தி பெறுபேறுகளை விநியோகிப்பதற்கும் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (ஆ) | மீளாய்வாண்டின் போது அரசாங்க மூலதன நிதி ஏற்பாடு ரூபா 6,472,850 ஐ பயன்படுத்தி 22 ஆராய்ச்சி பணிகளை மேற்கொள்வதற்கு எதிர்பார்க்கப்பட்டிருந்த போதும், 04 ஆராய்ச்சி பணிகளுக்காக ரூபா 390,025 | 16 ஆராய்ச்சி பணிகளுக்காக நிதி கோரப்படாதிருந்தமையால் கணனி பீடத்திற்காக அங்கீகரிக்கப்பட்ட 06 ஆராய்ச்சி பணிகளுக்காக உடன்படிக்கை கைச்சாத்திடப்பட்டிருக்க வில்லை. | ஆராய்ச்சி பணிகளுக்காக நிதி ஏற்பாடு செய்யப்பட்டுள்ள பணம் உச்ச அளவில் பயன்படுத்தப்படல் வேண்டும். |

மாத்திரம்
செலவிடப்பட்டிருந்தது.

### 3.3 நிதியத்தின் குறைவான பயன்பாடு

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| புலமைப்பரிசில் மற்றும் நன்கொடை பண முதலீட்டின் அடிப்படையில் மீளாய்வாண்டின் போது கிடைக்கப் பெற்ற ரூபா 3,691,428 ஆன வட்டி வருமானத்தில் ரூபா 402,986 மாத்திரம் உரிய நோக்கங்களுக்காக செலவிடப்பட்டிருந்ததுடன், மீளாய்வாண்டின் திசெம்பர் 31 இல் உள்ளவாறு ரூபா 14,575,335 கூட்டுத்தொகையான வட்டி வருமானம் உரிய நோக்கங்களுக்காக செலவிடப்பட்டிருக்கவில்லை. | மாணவர்களுக்கு நலன்களை அதிகளவில் வழங்குவதற்குரிய எடுகோள்களை மாற்றுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | மாணவர்களுக்கு நலன்களை பெறக் கூடிய வகையில் புலமைப் பரிசில் மற்றும் நன்கொடை பரிசு பண நிதியத்தை கால ரீதயில் மீளாய்வு செய்து உரிய பணத்தை பயன்படுத்துவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

### 3.4 செயற்திட்டம் அல்லது மூலதன வேலைகளின் தாமதம்

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | வணிக மற்றும் முகாமைத்துவ பீடத்திற்கு 10 மாடிகளை உடைய பீட கட்டிடத்தை நிர்மாணிக்கும் ஒப்பந்ததிற்காக ஆலோசனை சேவை வழங்குகின்ற நிறுவனத்திற்காக 2020 மற்றும் 2021 ஆம் ஆண்டுகின் போது கூட்டு மொத்தமாக ரூபா 15,013,437 தொகை ஆலோசனை சேவை கட்டணமாக செலுத்தப்பட்ட போதும் உரிய கட்டிடத்தின் நிர்மாண நடவடிக்கைகள் 2022 திசெம்பர் 31 ஆம் திகதி வரையும் ஆரம்பிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | தேசிய வரவு செலவு திட்ட சுற்றறிக்கை இலக்கம் 3/2022 மற்றும் 4/2022 இன் பிரகாரம் அரசாங்கத்தின் நிர்மாண நடவடிக்கைகளை நிறுத்துமாறு ஆலோசனை வழங்கப்பட்டமையால் உரிய ஒப்பந்தத்தின் நிர்மாண நடவடிக்கைகள் நிறுத்தப்பட்டிருந்தது. | அரசாங்கத்தின் நிதியை ஆக்கபூர்வமானதாக பயன்படுத்துதல் வேண்டும். |
| (ஆ) | 2020 ஆகஸ்ட் 10 ஆம் திகதி நிர்மாண நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்பட்டிருந்த 04 மாடிகளை உடைய ஹெட்டியாவத்தை பஞ்சாராம விடுதி கட்டிடத்தின் நிர்மாண நடவடிக்கைகள் கல்வி அமைச்சின் பணிப்பாளர் (உட்கட்டமைப்பு வசதிகள் அபிவிருத்தி) பணிப்பாளரின் 2021 யூன் 21 ஆம் திகதிய கடிதத்தின் ஆலோசனையின் படி இரு தரப்பினரினதும் இணக்கப்பாட்டின் | 04 மாடிகளை உடைய ஹெட்டியாவத்தை பஞ்சாராம விடுதி கட்டிடத்தின் வேலைகளுக்காக ஒப்பந்த உடன்படிக்கையின் பிரகாரம் கொடுப்பனவு செய்யப்பட்டுள்ளது. | அரசாங்கத்தின் நிதியை ஆக்கபூர்வமானதாக முகாமைத்துவம் செய்தல் வேண்டும். |

அடிப்படையில் இடையில் ஒப்பந்தம் இரத்துச் செய்வதற்கு நடவடிக்கை எடுத்தமையின் காரணமாக ஒப்பந்தகாரருக்கு ரூபா 4,029,430 மேலதிகமாக செலுத்த வேண்டி ஏற்பட்டிருந்தது. மேலும், உரிய ஒப்பந்தத்திற்காக வேலை முற்பணமாக ரூபா 32,698,197 தொகை ஒப்பந்த காரருக்கு செலுத்தப்பட்டிருந்தது.

## 3.5 பெறுகைகள் முகாமைத்துவம்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| பல்கலைக்கழகத்தின் 22 பிரிவுகளுக்காக அவசர தேவைகளை காண்பித்து கொள்வனவு செய்யப்பட்ட பெறுமதி ரூபா 4,726,000 ஆன 34 புரஜெக்டர் இயந்திரங்கள் 2022 ஏப்ரல் 21 ஆம் திகதி களஞ்சியத்திற்கு கிடைத்திருந்தது. களஞ்சியத்திற்கு கிடைத்து 02 மாதங்களுக்கு மேற்பட்ட காலம் கடந்த பின்னர் அதாவது 2022 யூலை 05 ஆம் திகதி முதல் நவம்பர் 24 ஆம் திகதி வரையான காலப் பகுதியில் அதில் 28 இயந்திரங்கள் மாத்திரம் பகிர்ந்தளிக்கப்பட்டிருந்தது. | தகவல் மற்றும் தொலைத் தொடர்பு தொழில்நுட்ப நிலையத்தில் பணிப்பாளாரால் சமர்ப்பிக்கப்பட்ட சகல கோரிக்கையையும் கவனத்தில் கொண்டு கொள்வனவு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. | கொள்வனவு செய்யப்பட்ட பொருட்களை பயன்படுத்துவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

## 3.6 மனித வள முகாமைத்துவம்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| 06 கற்கைப் பீடங்களுக்காக அங்கீகரிக்கப்பட்ட நிரந்தர கல்விசார் பதவி அணியினர் 814 ஆக இருந்ததுடன், 2022 திசெம்பர் 31 இல் உள்ளவாறு உள்படியான பதவி அணியினர் 679 ஆகும். அதில் 135 பேர்கள் ஏழு வருட விடுமுறை மற்றும் கற்கை விடுமுறை பெற்றுக் கொண்டமையினால் பல்கலைக்கழகத்தில் 14,532 ஆன மாணவர்களுக்கு தொடர்ச்சியாக கற்கை நடவடிக்கைகளை மேற்கொள்வதற்கும், பாட பரிந்துரையை மேவுகை செய்வதற்கும் வெளி விரிவுரையாளர்களின் உதவி பெறப்பட்டிருந்ததுடன், 2022 ஆம் ஆண்டின் போது மாத்திரம் வெளிவாரி விரிவுரைக் கட்டணமாக ரூபா 28,103,205 செலுத்தப்பட்டிருந்தது. அதில் 2021 ஆம் ஆண்டுடன் ஒப்பிடும் போது 56 சதவீத அதிகரிப்பாகும். | தற்போது சகல பீடங்களுக்காகவும் பத்திரிகை அறிவித்தல் பிரசுரித்து விண்ணப்பம் கோரப்பட்டு முடிவடைந்திருந்த போதும், தற்போது புதிய ஆட்சேர்ப்புக்கள் தற்காலிகமாக நிறுத்தப்பட்டமையினால் அங்கீகாரம் கிடைத்தவுடன் நியமன கடிதங்கள் விநியோகிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | கல்விசார் பதவி அணியினர் ஆகக் கூடிய பங்களிப்பை பெற்று மாணவர்களுக்கு தேவையான அறிவினை வழங்குதவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |